**செய்தி வெளியீடு எண்: 114** **நாள் : 18.03.2015**

# மாண்புமிகு உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மண்டல மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் சீராய்வுக்கூட்டம்

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** வழிகாட்டுதலின்படி, **மாண்புமிகு உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள்** தலைமையில் இன்று (18.03.2015) இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம், சென்னை, ஆணையர் அலுவலகக் கூட்டரங்கில், நடைபெற்றது.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் சிதிலமடைந்த கோயில்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவது தான் இந்து சமய அறநிலையத்துறையின் தலையாய நோக்கமாகக் கொண்டு அலுவலர்கள் ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயலாற்ற வேண்டுமென மாண்புமிகு உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 6972 திருக்கோயில்களில் திருப்பணிகள் முழுவதுமாக மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்று சாதனையாகும். மேலும் 216 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு விரைவில் குடமுழுக்கு செய்யும் நிலையில் உள்ளது.

தமிழக அரசால் நியமிக்கப்பட்ட தொல்லியல் வல்லுனர்கள் கொண்ட குழுவின் அறிவுரையை பெற்று திருக்கோயில்களை ஆய்வு செய்து அவற்றின் பழமை மாறாமல் புதுப்பிக்க திருப்பணிகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு 22.50 கோடி வீதம் கடந்த 4 ஆண்டுகளில் 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட திருக்கோயில்களில் மேற்கொண்ட புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்தியும் புனரமைப்புப்பணிகள் தேவைப்படும் திருக்கோயில்களின் எண்ணிக்கை மற்றும் நிதி ஆதாரம் குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

திருக்கோயில் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட களவு எச்சரிக்கை மணி, CCTV மற்றும் இதர பாதுகாப்பு நடவடிக்கைகளை அனைத்து திருக்கோயில்களிலும் உடன் செயல்படுத்த வேண்டும் எனத்தெரிவித்தார்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களை மூன்றுமாத காலத்திற்குள் நிறைவேற்றும் விதத்தில் அக்கறை செலுத்தி முனைப்புடன் செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார். குறிப்பாக தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் அன்னதானம் மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பள ஏற்று முறையில் ஊதியம் நிர்ணயிக்க **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** அறிவிப்பினை நிறைவேற்றிட துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

கும்பகோணத்தில் **2016** பிப்ரவரி **22**ம் நாள் நடைபெற உள்ள மகாமகப் பெருவிழாவினை முன்னிட்டு **69** திருக்கோயில்களுக்கு ரூ.**12** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திருக்கோயில்களின் திருப்பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்து குடமுழுக்கினை நடத்தும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து மகாமகப் பெருவிழாவினை சிறப்பாக நடத்த வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** வழிகாட்டுதலின்படி திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டே ஆகவேண்டும் என்கிற முனைப்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிலங்கள் மற்றும் கட்டிடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை மீட்டதற்கான நடவடிக்கைகள் குறித்தும் மீட்கப்பட உள்ள நிலங்கள் மற்றும் வாடகை நிலுவை குறித்தும் ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகளை வேகப்படுத்த துறை அலுவலர்களைக் கேட்டுக்கொண்டார்.

**528** திருக்கோயில்களுக்கு சொந்தமான **3098.30** ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதை கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்ய பெறப்பட்ட ஆணையின்படி திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டதை உறுதி செய்து ஆவணப்படுத்த வேண்டும்.

திருக்கோயில் நிலங்களின் பதிவுகள் கணினியில் பதிவு செய்து தரவுகள் மென்பொருளில் காக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவுசெய்து திருக்கோயில் நிலங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை இணையத்தில் மக்கள் பார்வைக்கே வைக்கும் அளவிற்கு புள்ளி விவரங்களை மேம்படுத்த வேண்டும்.

தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அத்துடன் திருக்கோயில் பக்தர்களுக்கு எந்தவிதத்திலும் மனம் புண்படாதவண்ணம் அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு அவர்களை அணுகி தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்துடன் திருக்கோயில் பக்தர்களுக்கு எவ்விதத்திலும் மனம் புண்படாதவண்ணம் அர்பணிப்பு மனப்பான்மையோடு அவர்களை அணுகி தேவைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மலை வளமும், நில வளமும் கண்ணார கண்டு கடவுளை தரிசிப்பது வாழ்வில் பெறும் பேறு எனக் கருதும் பக்தர்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் மலையேற்றம் அனைவருக்கும் சாத்தியமாகும் வகையில் சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர்

திருக்கோயில், குளித்தலை ஐயர் மலை இரத்தினகிரீஸ்வரார் திருக்கோயிலிலும் கம்பி வட ஊர்தி வசதி ஏற்படுத்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே பழநி மலையில் ஏற்படுத்தப்பட்ட கம்பிவட ஊர்தியுடன் புதியதாக உயர்தர கம்பிவட ஊர்தி இறக்குமதி செய்யப்பட்டு உயர்தர கம்பி வட ஊர்தி 2வதாக ஏற்படுத்தப்படவுள்ளது. அதனையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மேலும் சதுரகிரி மலையிலும் கம்பிவட ஊர்திக்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை **கூடுதல் தலைமை செயலர், முனைவர் இரா.கண்ணன், இ.ஆ.ப.,** அவர்கள் பேசும் போது, தல விருட்சங்கள் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும். மேலும், நீராதாரம் இருக்கும் இடங்களில் இயற்கைத் தாவரங்களை வளர்த்து அமைதியான சூழல் நிலவ நடவடிக்கை எடுக்க வேண்டும். தொன்மைவாய்ந்த திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ளும்போது வல்லுநர் குழு அறிவுரை பெற்று கவனமாக செயல்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை **ஆணையர் முனைவர் மா.வீரசண்முக மணி, இ.ஆ.ப.,** அவர்கள் இத்துறையின் திட்டங்களை செயல்படுத்தும் முறை குறித்து விளக்கினார்.

இக்கூட்டத்தில் **கூடுதல் ஆணையர் (விசாரணை) ந.திருமகள் அவர்கள் மற்றும் கூடுதல் ஆணையர் (திருப்பணி) மா.கவிதா அவர்கள்** உட்பட தலைமையிட அலுவலர்கள், இணை ஆணையர்கள், இணை ஆணையர்/செயல் அலுவலர்கள், துணை ஆணையர்/செயல் அலுவலர்கள், உதவி ஆணையர்கள், உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள் மற்றும் பொறியியல் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**